# குளித்தலை நகராட்சி

21.11.2019.ஆம் தேதி வியாழக்கிழமை காலை 11.30 மணியளவில் நகராட்சி மன்ற அலுவலகத்தில் நடைபெற்ற அவசரக்கூட்டம்

ஆணையர் மற்றும் தனி அலுவலர்(பொ)
குளித்தலை நகராட்சி.

-------

**பொருள்– 01.** அரசாணை எண்(MS) 150, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (ந.நி.IV) துறை, நாள்–19.11.2019.ன்படியும், நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்.40032/2012/ஆர்1, நாள்–20.11.2019.ல் தெரிவிக்கப்பட்டுள்ள அறிவுரைகளின்படியும், அரசாணை எண்.76, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்–26.07.2018.ன்படி, 01.04.2018.ஆம் தேதிமுதல் சொத்துவரி பொது சீராய்வு (Revision of Property Tax) மூலம் உயர்த்தப்பட்ட சொத்துவரி உயர்வினையும், சொத்துவரி விதிப்புக்கான மண்டல மதிப்பு (Zonal Rate's) 01.04.2018 முதல் உயர்த்தப்பட்டதையும். மற்றும் 01.10.2017.ஆம் தேதிமுதல் சொத்துவரி மறு சீரமைப்பு (Remeasurement) செய்து உயர்த்தப்பட்டதையும் நிறுத்திவைக்க தெரிவிக்கப்பட்டுள்ள விபரம் மன்றத்தின் பார்வைக்கும், அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு–** 1). அரசாணையினை மன்றம் பதிவு செய்யலாம்.
2). மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண்.2355/2018/அ1)

**பொருள்– 02.** குளித்தலை நகராட்சி ஆணையர் இருக்கை (Chair) பழுதடைந்து உள்ளது. புதிய சேர் வாங்குவதற்கான 24.10.2019 தேதியில் பெறப்பட்ட விலைப்புள்ளிகள் பின்வருமாறு.

| வ. எண். | விபரம் | நிறுவனங்களின் விபரம் | விலைப்புள்ளி தொகை |
|---|---|---|---|
| 1) | Revolving Chair (Butter Fly Majestic) | 1)P.S.V.Gopal Chettiar, 25.Theppakulam street, Kulithalai. | ரூ.10,000/– |
| | | 2) ராஜன் பாத்திரக்கடை, 52,பஜார்தெரு, குளித்தலை. | ரூ.10,950/– |
| | | 3) சரவணா மெட்டல் மார்ட், 48,ஆண்டார்மெயின்ரோடு, குளித்தலை. | ரூ.11,500/– |

**அலுவலக குறிப்பு–** வரிசை எண்.1.ல் ஆன குறைந்த விலைப்புள்ளி வழங்கி உள்ள P.S.V.Gopal Chettiar நிறுவனத்தார் விலைப்புள்ளியை ஏற்கலாம். ஆணையர்(பொ) மற்றும் தனி அலுவலர் முன்அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கியதை அங்கீகரித்து செலவினத்தை பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண்.2300/2019/இ1)

**பொருள்– 03.** இந்நகராட்சி பொது சுகாதாரப் பிரிவு கொசு ஒழிப்பு பணிக்காக டெங்கு தடுப்பு பணிக்காக புகை மருந்து அடிப்பதற்கு புகைபோக்கி இயந்திரங்களை 2019–2020.ஆம் வருடாந்திர பழுது நீக்கம் செய்வதற்கு பொது சுகாதார அவசர அவசியம் கருதி, ஆணையர் மற்றும் தனி அலுவலர் முன்அனுமதி பெற்று 23.10.2019.ல் ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு செய்யப்பட்டு, ஒப்பந்தப்புள்ளி வரப்பெற்றுள்ளதை மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண். | நிறுவனத்தின் பெயர் | வருடாந்திர பழுது நீக்கம் செய்வதற்கு 1 புகை போக்கி இயந்திரங்களுக்கு | |
|---|---|---|---|
| | | பெரிய புகைபோக்கி இயந்திரம் 1.க்கு | சிறிய புகைபோக்கி இயந்திரம் 1.க்கு |
| 1) | System Engineering, 1.Annai Sathyanagar, Mainroad, Ramapuram, Chennai-600 089 | ரூ.54600/– | ரூ.14000/– |
| 2) | S.N.Enterprises, Plot No.6, Door No.1G, Rajaji Avenue, Valasaravakkam, Chennai-600 087 | ரூ.55500/– | ரூ.14500/– |

**அலுவலக குறிப்பு–** 1). மன்றம் பதிவு செய்யலாம்.
2). ஆணையர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் முன்அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதையும் பொது நிதியில்இருந்து பில் பட்டியல்படி தொகை வழங்கியதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.
(ந.க.எண்.2309/2019/எச்1)

..2..

பொருள்– 04. குளித்தலை நகராட்சி சத்தியமங்கலம் உரக்கிடங்கில் பயோமைனிங் முறையில் குப்பைகள் அகற்றும் பணி நடைபெற்று வருகிறது. தமிழ்நாடு மின்வாரிய உதவி செயற்பொறியாளர், அய்யர்மலை அவர்கள் தெரிவித்துள்ளதன்படி, உயர் மின் அழுத்த மின் இணைப்பு பெற அவசர அவசியம் கருதி, கூடுதலாக 2 பேனல் போர்டு அமைக்கும் பணி, தமிழ்நாடு நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 15.ன்கீழ் மேற்கொள்ளப்பட்டது. ஒப்பந்ததாரர் திரு.எம்.செந்தில்குமார் மூலம் பணி மேற்கொண்டு ரூ.4,82,224/– (ரூபாய் நான்கு லட்சத்து எண்பத்து இரண்டு ஆயிரத்து இருநூற்று இருபத்து நான்கு மட்டும்) பட்டியல் தொகை வழங்கியதன் விபரம் மன்றத்தின் பார்வைக்கும் பதிவுக்கும்.

அலுவலக குறிப்பு– மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.
(ந.க.எண்.3341/2018/இ1)

பொருள்– 05. இந்நகராட்சி பொது சுகாதாரப் பிரிவு கொசு ஒழிப்பு பணிக்காக முதிர்வு கொசுக்களை ஒழிப்பதற்கு டெங்கு தடுப்பு நடவடிக்கையாக குடியிருப்பு வீடுகளில் புகை மருந்துஅடிப்பதற்கு கை புகைபோக்கி இயந்திரம்–6, கேஸ் சிலிண்டர் புகை மருந்து–100 வாங்குவதற்கு ஆணையர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் முன்அனுமதி பெற்று, பொது சுகாதார அவசர அவசியம் கருதி, நாள்–23.10.2019.ல் ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு செய்யப்பட்டு, அதன்படி கீழ்க்கண்ட ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளதை மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண். | நிறுவனத்தின் பெயர் | கை புகை மருந்து இயந்திரம் 1.ன் விலை | கேஸ் சிலிண்டர் புகை மருந்து 1.ன் விலை |
|---|---|---|---|
| 1) | S.N.Enterprises,<br>Plot No.6, Door No.1G, Rajaji Avenue,<br>Valasaravakkam, Chennai-600 087 | ரூ.24000/– | ரூ.296/– |
| 2) | System Engineering,<br>No.1.Annai Sathyanagar, Mainroad,<br>Senthamilnagar, Ramapuram, Chennai-600 089 | ரூ.22000/– | ரூ.272/– |

அலுவலக குறிப்பு– 1). வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் Systems Engineering, Chennai-89 என்பவரின் ஒப்பந்தப்புள்ளியானது மற்ற ஒப்பந்தப்புள்ளியைக்காட்டிலும் குறைவான ஒப்பந்தப்புள்ளியை ஏற்கலாம்.
2). ஆணையர் மற்றும் தனி அலுவலர் முன்அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதையும் பில்பட்டியல்படி தொகை வழங்கியதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.
(ந.க.எண்.2310/2019/எச்1)

பொருள்– 06. குளித்தலை நகராட்சி பகுதிகளில் உள்ள கல்வி நிறுவனம், அரசு மற்றும் தனியார் பள்ளி மாணவ / மாணவிகள் மற்றும் பேருந்து நிலையம், ரயில் நிலையம், பொது இடங்களில் நிலவேம்பு குடிநீர் வழங்க வேண்டியுள்ளது. அதன்படி நிலவேம்பு பொடி தமிழக அரசு நிறுவனமான தமிழ்நாடு மெடிசன்ஸ் பௌன்டேசன் கம்பெனி லிமிடெட்(TAMPCOL) நிறுவனத்தில் இருந்து 50 கிலோ நிலவேம்பு பொடி வாங்கி வழங்க ஆகும் செலவினம் ரூ47970/–க்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு– 1). மன்றம் பதிவு செய்யலாம்.
2). இச்செலவினம் பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
3). இந்நகராட்சி பொது சுகாதார அவசர அவசியம் கருதி ஆணையர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் முன்அனுமதி பெற்று பணி மேற்கொண்டதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.
(ந.க.எண்.2572/2019/எச்1)

பொருள்– 07. குளித்தலை நகராட்சி வைகைநல்லூர் அக்ரஹாரம் பொதுசந்து பகுதியில் குடிநீர் முக்கிய குழாய் (Main Line) பதித்ததற்கு ஆட்சேபணை செய்து திரு.ஆறுமுகம் என்பவர், இரண்டாம் மேல்முறையீடு 16/16–ஐ, குளித்தலை சார்பு நீதிமன்றத்தில் தொடர்ந்து இருந்தார். மேற்படி வழக்கு 07.11.2019.ல் முழுமையாக தள்ளுபடி செய்து தீர்ப்பு பெறப்பட்டுள்ளது என, நகராட்சி வழக்கறிஞர் எம்.காஜாமொகைதீன் கடிதம் வழங்கி உள்ளார். அதன்படியான வழக்கறிஞர் கட்டணம் ரூ.10,000/–ஐ, வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு– அனுமதி வழங்கலாம். ஆணையர்(பொ) மற்றும் தனி அலுவலர் முன்அனுமதி பெற்று தொகையினை வழங்கியதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.
(ந.க.எண்.2922/2013/இ1)

..3..

பொருள்– 08. இந்நகராட்சிக்கு தணிக்கை ஆய்வு 2018–2019.ம் ஆண்டிற்கு மேற்கொண்ட வகையில், தணிக்கை அறிக்கை கணனியில் தட்டச்சு செய்து ஒளிபுகு நகல்கள் மற்றும் 7 எண்ணம் தணிக்கை ஆய்வு புத்தகங்கள் வடிவில் செய்தமைக்கு உரிய செலவினம் ரூ.12,800/– (ரூபாய் பனிரெண்டு ஆயிரத்து எண்ணூறு மட்டும்) திரு.பி.வேணுகோபால் என்பவருக்கு வழங்குவதற்கு, மன்றத்தின் முடிவிற்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு– அவசர அவசியம் முன்னிட்டு மன்ற அனுமதியை எதிர்நோக்கி, ஆணையர் மற்றும் தனி அலுவலர்(பொ) அவர்களின் முன்அனுமதி பெற்று, பி.வேணுகோபால் என்பவருக்கு ரூ.12,800/–ஐ வழங்கியமைக்கு மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண்.1658/2016/பி1)

பொருள்– 09. குளித்தலை நகராட்சியின் 2017–2018.ஆம் ஆண்டிற்கு ரூ.55974.00.ம் மற்றும் 2018–2019.ஆம் ஆண்டுக்கு ரூ.97925.00.ம் ஆகமொத்தம் ரூ.153899.00 தணிக்கைக் கட்டணமாக அரசு தலைப்பில் செலுத்தப்பட வேண்டும் என கரூர் உள்ளாட்சி நிதித் தணிக்கைத்துறை உதவி இயக்குநர் அவர்களின் கடிதம் ப.வெ.எண்.11/அ1/2019, நாள்–30.10.2019.ல் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே, அரசாணை எண்.65, உள்ளாட்சித்துறை நாள்–17.01.94.ன்படி தணிக்கைக்கான கட்டணம் ரூ.1,53,899/–ஐ, அரசு தலைப்பில் செலுத்துவதற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு– மன்ற அனுமதியை எதிர்நோக்கி, ஆணையர் மற்றும் தனி அலுவலர்(பொ) அவர்களின் முன்அனுமதி பெற்று 2017–2018 மற்றும் 2018–2019.ஆம் ஆண்டுகளுக்குரிய தணிக்கைக் கட்டணம் ரூ.1,53,899/–ஐ, உரிய அரசு தலைப்பில் செலுத்தியமைக்கு மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண்.1057/2018/பி1)

பொருள்– 10. இந்நகராட்சி பொது சுகாதாரப்பிரிவு கொசு ஒழிப்பு பணிக்காக கொசு புழுக்களை ஒழிப்பதற்கு இந்நகராட்சி பகுதிகளில் உள்ள சாக்கடை மற்றும் கழிவுநீர் தேக்கங்களில் கொசு புழு மருந்து தெளிக்க வேண்டி உள்ளது. ஆதலால் கை தெளிப்பான் 6 எண்ணிக்கை வாங்குவதற்கு மன்ற தீர்மானம் எண்.22, நாள்–28.02.2019.ல் மன்ற அனுமதி பெறப்பட்டுள்ளது. மேற்காணும் தீர்மானத்திற்கிணங்க கை தெளிப்பான்–6 வாங்குவதற்கு 23.10.2019.ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. கீழ்க்கண்ட ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளதை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண். | நிறுவனத்தின் பெயர் | கை தெளிப்பான் 1.ன் விலை |
|---|---|---|
| 1) | Systems Engineering, No.1.Annai Sathyanagar, Mainroad, Santhamilnagar, Ramapuram, Chennai-600 089 | ரூ.9600/– |
| 2) | S.N.Enterprises, 6/1, Rajaji Avenue, Valasaravakkam, Chennai-600 087 | ரூ.10500/– |

அலுவலக குறிப்பு– வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் Systems Engineering, Chennai-89 என்பவரின் ஒப்பந்தப்புள்ளியானது மற்ற ஒப்பந்தப்புள்ளியைக்காட்டிலும் குறைவான ஒப்பந்தப்புள்ளியை ஏற்கலாம்.
(ந.க.எண்.257/2019/எச்1)

*******

# குளித்தலை நகராட்சி

21.11.2019.ஆம் தேதிய அவசரக்கூட்டத் தீர்மானங்களின் உண்மைநகல்

| வ. எண். | பொருள் எண். | தீர்மானம் எண். | தீர்மான விபரம் |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 1 | 1 | 183 | அனுமதிக்கப்பட்டது. |
| 2 | 2 | 184 | அனுமதிக்கப்பட்டது. |
| 3 | 3 | 185 | அங்கீகரிக்கப்பட்டது. |
| 4 | 4 | 186 | பதிவு செய்யப்பட்டது. |
| 5 | 5 | 187 | அங்கீகரிக்கப்பட்டது. |
| 6 | 6 | 188 | அங்கீகரிக்கப்பட்டது. |
| 7 | 7 | 189 | அங்கீகரிக்கப்பட்டது. |
| 8 | 8 | 190 | அனுமதிக்கப்பட்டது. |
| 9 | 9 | 191 | அனுமதிக்கப்பட்டது. |
| 10 | 10 | 192 | ஏற்கப்பட்டது. |

ஒம்/—ந.புகழேந்தி,
நகராட்சி பொறியாளர்,
ஆணையர்(பொ) மற்றும் தனி அலுவலர்(பொ),
குளித்தலை நகராட்சி.

/ உண்மை நகல் /

ஆணையர்(பொ),
குளித்தலை நகராட்சி.